# இரட்சிப்பு அக்டோபர் 2026 யுனிகோடு



## இயக்குநர் கடிதம்...

FROM THE MISSION DIRECTOR'S DESK

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே!...

2026ம் ஆண்டின் 10வது மாதத்திற்குள் நம்மை வழிநடத்திய நம் துங்காதி துங்கவர் இயேசுவின் பாதம், பணிந்து தொழுவோம். இம்மாதம் 2ம் தேதி நம் தேசப்பிதா மஹாத்மா காந்தி அவர்களின் பிறந்தநாள் (GANDHI JEYANTHI), 25ம் தேதி சீர்திருத்த ஞாயிறு (REFORMATION SUNDAY), 28ம் தேதி அப்போஸ்தலரும் இரத்தசாட்சிகளுமான தூய.ததேயு எனப்பட்ட யூதா மற்றும் தூய.செலோத்தே எனப்பட்ட சீமோன் ஆகியோரின் திருநாட்கள் (FEAST DAY OF THE APOSTLES AND MARTYRS ST.JUDE THADDAEUS AND ST.SIMON THE ZEALOT), 31ம் தேதி சீர்திருத்த திருநாள் (REFORMATION DAY) ஆகிய திருநாட்களை நாம் ஆசரிக்கிறோம். இந்நாட்களை ஜெபத்துடன் ஆசரித்து, ஆசீர்வாதம் பெற உங்களை அன்புடன் நினைவுபடுத்துகிறோம்.

ஜெப-ஜன்னல்-PWPM, வேதாகம-போட்டிகள்-RBKC, அனைவரும்-ஊழியத்தில்-AIMS திட்டங்களில் பங்குபெற உங்களை அன்புடன் அழைக்கிறோம். பத்திரிக்கை ஊழியம், வலைதள ஊழியம் (www.ratchippu.com), புத்தக வெளியீட்டு ஊழியம், காணொலி-செய்தி ஊழியம், 'நல்ல-விதைகள்' கைப்பிரதி ஊழியம், NMSI மிஷனரி ஊழியம், திருச்சபை ஊழியம் ஆகிய நமது ஊழிய இயக்குநரின் ஊழியங்களுக்காக ஜெபித்துக்கொள்ளுங்கள்.

ஜெப-விண்ணப்பங்கள், அனுபவ-சாட்சிகள், காணிக்கைகள் அனுப்புவோர் ஊழிய இயக்குநரின் பெயருக்கு அனுப்பவும். தகவல் தொடர்பு விபரம், வங்கி விபரம், UPI மற்றும் QR CODE ஆகியவை இப்பத்திரிக்கையின் 18வது பக்கத்திலும், நமது வலைதளத்திலும் உள்ளன. கிருபை உங்களோடு இருப்பதாக. ஆமென்.

கிறிஸ்துவின் பணியில்
அருட்திரு. எஸ்.ஜே.டி. தர்மராஜா

# இரட்சிப்பு இணைத் திருமறை

## (தமிழ் வேதாகமங்களின் ஒற்றுமைத் திரட்டு)

வேத-வரிகள்-188 அக்டோபர் 2026 பிரசங்கி -3:13

**சத்திய வேதம் (ரேனியஸ்-1840)**

ஆனால், மனுஷன் எவனாகிலுஞ்சரி, புசித்துக் குடித்துத் தன்னுடைய எல்லா வருத்தத்திலும் நன்மையை அநுபவிப்பது பராபரனுடைய ஈவு.

**பரிசுத்த வேதாகமம் (பவர்-1867)**

அன்றியும் மனுஷர் யாவரும் புசித்துக் குடித்துத் தங்கள் சகலப் பிரயாசத்தின் பலனையும் அநுபவிப்பது தேவனுடைய அநுக்கிரகம்

**திருவிவிலியம் (பொது-1995)**

உண்டு குடித்து உழைப்பால் வரும் பயனைத் துய்க்கும் இன்பம் எல்லா மனிதருக்கும் கடவுள் அளித்த நன்கொடை

**பரிசுத்த பைபிள் (இ.ஆர்.வி-1998)**

எல்லோரையும் உண்ணவும் குடிக்கவும் அவரவர்க ளுடைய வேலையில் மகிழ்சியடையவும் செய்வது தேவன் தரும் அன்பளிப்பு..

## ஜெப-ஜன்னல் ஜெப-விண்ணப்பங்கள் - அக்டோபர் 2026

**கர்த்தரை நோக்கி மன்றாடுவோம் - COME! LET US ALL INTERCEDE TO GOD**

1) அகில உலக சமாதானத்துக்காக... அமெரிக்கா-ஈரான், உக்ரைன்-ரஷ்யா போர்கள் நிறுத்தப்பட... உலகளாவிய போர் நிறுத்தங்கள் மதிக்கப்பட... நேபாள-திபத் எல்லையில் ஏற்பட்ட திடீர் வெள்ளத்தில் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்கள் குடும்பங்களுக்காக...

2)இந்தியாவில் மதப்-பிரிவினைவாத சூழ்ச்சிகள் முறியடிக்கப்பட... சிறுபான்மை மக்கள் மீதான திட்டமிடப்பட்ட மறைமுக ஒடுக்குதல்கள் நிறுத்தப்பட... இந்திய நீதிமன்றங்கள் பாரபட்சமின்றி நீதி வழங்க... ஒன்றிய அரசு ஜனநாயக மற்றும் அரசியல்-சாசன மரபுகளை மதித்து நடக்க... இந்தியாவில் போராடும் மக்களுக்கு நல்ல தீர்வு கிடைக்க...

3)தமிழ்நாட்டு மக்களின் ஒற்றுமை வாழ்வுக்காக... தமிழ்நாட்டில் தொழில்கள்-வியாபாரம் செழிக்க... மதவாத, அடிப்படைவாத சக்திகள் கட்டுப்படுத்தப்பட... தமிழ்நாட்டின் அரசியல் ஸ்திரத்தன்மைக்காக... தமிழ்நாடு அரசு உண்மை மற்றும் நேர்மையுடன் செயல்பட...

4)திரு. ஜோயன்ஸ் அவர்களின் இரட்சிப்பு மற்றும் ஆவியின் அபிஷேகத்துக்காக... திருமதி. சுந்தரிபாய் அவர்களின் முழு குடும்பமும் இரட்சிக்கப்பட...

5)திருமதி.ஜேனிஸ், திருமதி.சுமி ஜேஸ்மின், திருமதி.மெர்லின், திருமதி.பாக்கியா, திருமதி. திலகவதி மகேஷ், திருமதி.வைலட், திருமதி.சுதா, திருமதி.பிரியா சுதிர், திருமதி.புஷ்பாவதி, திருமதி.ஹனா விஜய் ஆகியோருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க...

6)செல்வி.டிரிசியா லவ்ஸ்லி அவர்களின் திருமணம் சிறப்பாக நடைபெற... அவர்களுடைய ஆசீர்வாதமான குடும்ப வாழ்வுக்காக...

7)பிரி-கே.ஜி முதல் பள்ளியிறுதி வரை பயிலும் நம் பிள்ளைகளின் ஞானத்துக்காக... ஜெ.ஃப்ரி S. ஆரோன், ஜே.ஃபியா S.அன்னா, ஆஷெர், ஜெரிக், ஜெர்லின், சிரில், ஷாலோம் ஆகிய நம் பிள்ளைகளுக்கு சிறந்த ஞானம் வழங்கப்பட...

8)பிளஸ்-1, முதல் பி.ஹெச்.டி வரை, உயர்-கல்வி பயிலும் நம் பிள்ளைகளின் ஞானத்துக்காக... சிவா, கிளாட்சன், பார்வதி, பிரேம், பிரியங்கா, ஜாஸ்மின், சிப்ரா, ஷி.ஃபியா, ஷெரின் டேவிட், ஜாஷ்வா மேத்யூ, வில்சன், ஜோயல், ஜெனிபர், சாம், சிந்தியா பிரகாஷ் ஆகிய நம் பிள்ளைகளுக்கு சிறந்த ஞானம் வழங்கப்பட...

9)திரு.ஜாண்ஸன் (பியூலா), திரு.RCP.நிக்ஸன், திருமதி.மல்லிகா, திருமதி.ஈவ்லின் USA, சகோ. சவேரியம்மாள், திருமதி.அப்டி அலெக்ஸ், திரு.செல்வராஜ், திருமதி.செல்வி, திருமதி.ஜேஸ்மின் ஞானதாஸ், திரு.அசரியா ஞானதாஸ், திரு.நெல்சன் (நகோமி), திரு.வெஸ்லி சாமுவேல், திரு. சுந்தர்சிங், திரு.அப்பன் டேவிட், திரு.ஜூலியன் ஆகியோரின் சரீர சுகத்திற்காக...

10)திருமதி.ஏஞ்சலின் யோசபாத், Dr.ஷீபா, திரு.ஜெபனேசர், திருமதி.ஜரீன் வாக்கர், திருமதி.ஞானம் ஜெபராஜ், திருமதி.ஜலீன் செல்லத்துரை, திருமதி.வசந்தா அன்பன், திருமதி.சுகிர்தா சின்னதுரை ஆகியோரின் குடும்ப ஆசீர்வாதங்களுக்காக...

11)நமது ஊழிய ஆதரவாளர்களான திருமதி.புனிதா ரவிநாத், திரு.ஜாண் இன்பராஜ், திருமதி.தேவ பொன்மலர் ஜோனத்தான், திருமதி.ஜரீன் வாக்கர், திருமதி.ஷைனி ஜேம்ஸ், திருமதி.அரோமா சாத்ராக், திரு.சாம்சன் ஆபிரகாம், திரு.S.J.P. ராஜா, திரு.J.R. டேவிட், திரு.அசரியா ஞானதாஸ், திருமதி.ராணி சாமுவேல்ராஜ் ஆகியோருக்காக... அவர்களுடைய குடும்பங்களுக்காக...

==========================================================================================

சீர்திருத்த தினம் சிறப்பு தேவசெய்தி...

# தேவ கிருபை மாத்திரமே



## சூரியனுக்குக் கீழே ஒரு புதிய நம்பிக்கை

மனுஷர் தங்கள் சகலப் பிரயாசத்தின் பலனையும் அநுபவிப்பது தேவனுடைய அநுக்கிரகம்.
பிரசங்கி 3:13

## SOLA GRATIA - GRACE ALONE

REV. SJD. DHARMARAJA, PRESBYTER & MISSION DIRECTOR,
GOOD TIDINGS BIBLE PRINTS, CHENNAI - 93. SOUTH INDIA

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய திருப்பெயரில் அனைவருக்கும் என் அன்பின் சீர்திருத்த திருநாள் வாழ்த்துக்கள். திருச்சபை சீர்திருத்தவாதிகளின் அடிநாதமாகிய 'கிருபை மாத்திரமே' (GRACE ALONE) என்ற செம்பொருளை, சாலோமோனின் பிரசங்கி புத்தகத்தின் வெளிச்சத்தில் தியானிப்பதற்கு அழைக்கப்படுகிறோம்.

பல நூற்றாண்டுகளுக்கு முன்பு திருச்சபைச் சீர்திருத்தவாதிகள் (PROTESTANT REFORMERS) ஒரு உண்மையை உலகிற்கு சொன்னார்கள்: 'SOLA GRATIA' அதாவது நமது இரட்சிப்பு மற்றும் நிறைவாழ்வு ஆகியவை கடவுளின் கிருபையால் மட்டுமே கிடைக்கின்றன என்ற விவிலிய உண்மையே அது. இதைப் புரிந்துகொள்ள நாம் பொதுவாகப் புதிய ஏற்பாட்டுப் பகுதிகளைத்தான் நாடுவோம். ஆனால், இந்த தியானத்தில், பிரசங்கி புத்தகத்தின் வெளிச்சத்தில் கிருபையின் ஆழந்த சத்தியங்களை தியானிக்க அழைக்கப்படுகிறோம்.

**1. மனித நீதியின் திவாலான நிலை: (பிர.7:20)**

"ஒரு பாவமும் செய்யாமல், நன்மையே செய்யத்தக்க நீதிமான் பூமியில் இல்லை" (பிர.7:20). நம்முடைய உண்மையான அபாத்திர நிலையை நாம் ஒப்புக்கொள்ளும் வரை, ~இறைவனின் பேரருள் மட்டுமே| (SOLA GRATIA) என்ற கோட்பாடு நமக்கு விளங்காது. கி.பி. 16ம் நூற்றாண்டின் தொடக்கத்தில், ஜெர்மனியைச் சேர்ந்த மார்ட்டின் லூதர் (MARTIN LUTHER) என்ற துறவி இந்த வசனத்தின் ஆழமான பாரத்தை உணர்ந்தார். ஒரு தூய்மையான இறைவனின் முன்னிலையில் நிற்கத் தனக்கு எந்தத் தகுதியும் இல்லை என்பதை அவர் அறிந்தார். தினமும் 6மணி நேரம் தன் பாவங்களை அறிக்கையிட்டார்; ஆனாலும், அவருடைய மனச்சாட்சி அவருக்கு அமைதியைத் தரவில்லை. அவர் எழுதினார்: "நான் ஒரு துறவியாக, எப்படி இரட்சிக்கப்பட முடியுமோ அப்படி வாழ்ந்தேன். ஆனால் என் மனச்சாட்சி எப்போதும் குற்ற உணர்வோடு தான் இருந்தது." பிரசங்கி 7:20 சொல்வதுபோல், எவ்வளவுதான் முயன்றாலும் மனித இயல்பில் உள்ள பாவக் கறையை சுயமுயற்சியால் கழுவ முடியாது என்பதை லூதர் தன் சொந்த வாழ்க்கையில் உணர்ந்தார். நம்முடைய 'நல்ல செயல்கள் நமது தீய செயல்களை' சமன் செய்துவிடும் என்ற மாயையை

பிரசங்கி இங்கு உடைக்கிறார். சூரியனுக்குக் கீழே மனிதர்களால் நீதியை உருவாக்க முடியாது; எனவே, நீதி என்பது இறைவனிடமிருந்து நமக்குக் கொடையாக மட்டுமே வர வேண்டும்.

**2. சுய-இரட்சிப்பின் வீண் முயற்சி: (பிரசங்கி 1:14; 2:11)**

"சூரியனுக்குக் கீழே செய்யப்படுகிற காரியங்களையெல்லாம் கவனித்துப் பார்த்தேன்; இதோ, எல்லாம் மாயையும், மனதுக்குச் சஞ்சலமுமாய்; இருக்கிறது" மனிதர்கள் இயல்பாகவே தங்களது கடின உழைப்பு, செல்வம், அறிவுத்திறன் மற்றும் ஒழுக்கநெறிகள் மூலம் தங்களைத் தாங்களே இரட்சித்துக் கொள்ள முயல்கிறார்கள். பிரசங்கி இவை அனைத்தையும் செய்து பார்த்துவிட்டு, இவையெல்லாம் மாயை, அதாவது காற்றை கரங்களால் பிடிக்க முயல்வது போன்றது என்று முடிவு செய்கிறார்.

லூதரின் காலத்தில், கத்தோலிக்க திருச்சபை "பாவமன்னிப்புச் சீட்டுகளை" (INDULGENCES) விற்பனை செய்தது. மக்கள் பணம் கொடுத்து அந்தச் சீட்டுகளை வாங்கினால் அவர்களின் பாவங்கள் மன்னிக்கப்படும் என்றும், அவர்கள் இறந்த பிறகு காத்திருப்பதிலிருந்து (PURGATORY) தப்பிப்பார்கள் என்றும் போதிக்கப்பட்டது. சீர்திருத்தவாதிகளான ஜான் கால்வின் மற்றும் லூதர் இந்த நடைமுறையை எதிர்த்தார்கள். மனிதன் பணத்தையோ, புண்ணியங்களையோ கொடுத்து இரட்சிப்பை விலைக்கு வாங்க முயல்வது, பிரசங்கி கூறுவது போல 'காற்றைப் பிடிக்கும்' ஒரு வீண் செயலே என்று அவர்கள் முழங்கினார்கள். இரட்சிப்பை மனிதன் உற்பத்தி செய்ய முடியாது; அதை இறைவன் மட்டுமே அருள முடியும். பிரசங்கி சொல்வதற்கிணங்க, நம் சொந்த முயற்சியால் இறைவனின் அன்பைப் பெற வேண்டும் என்ற பாரத்திலுமிருந்து SOLA GRATIA நம்மை விடுவிக்கிறது.

**3. மகிழ்ச்சியை அனுபவிப்பது இறைக்கொடையே: (பிர.3:12-13; 5:19)**

"தேவன் ஐசுவரியத்தையும் சம்பத்தையும் எவனுக்குக் கொடுத்திருக்கிறாரோ, அவன் அதிலே புசிக்கவும், தன் பங்கைப் பெறவும், தன் பிரயாசத்தில் மகிழ்ச்சி யாயிருக்கவும் அவனுக்கு அதிகாரம் அளிப்பது தேவனுடைய அநுக்கிரகமே." பிரசங்கி 5:19 மற்றும் 6:1-2ல் பிரசங்கி, ஒரு அதிர்ச்சியூட்டும் உண்மையை குறிப்பிடுகிறார்: ஒரு மனிதனிடம் உலகிலுள்ள அனைத்து செல்வங்களும் இருக்கலாம், ஆனால் அதை அனுபவிக்கும் பாக்கியத்தை (கிருபையை) அவனுக்குக் கொடுப்பவர் தேவனே, என்பதே அவ்வுண்மை.

சீர்திருத்த காலத்தில், ஆன்மீக மகிழ்ச்சியையும் அமைதியையும் அடைவதற்காகப் பலர் உலகைத் துறந்து, திருமணம் செய்யாமல், வறுமையை ஏற்றுக்கொண்டு மடாலயங்களில் துறவறம் மேற்கொண்டனர். ஆனால் மார்ட்டின் லூதர் போன்ற சீர்திருத்தவாதிகள் 'கிருபை மாத்திரமே' என்ற உண்மையை உணர்ந்து, மடாலயங்களைவிட்டு வெளியே வந்தனர். லூதர் திருமணம் செய்து கொண்டார்; குடும்ப வாழ்க்கையை ரசித்தார்; நல்ல உணவையும் இசையையும் இறைவனின் கொடையாகக் கொண்டாடினார். விவிலியம் காட்டும் பேரருள் என்பது உலகை வெறுப்பதில் இல்லை, மாறாக இறைவன் தரும் எளிய அன்றாட ஆசீர்வாதங்களை அவருடைய கிருபையின் பரிசாக ஏற்று மகிழ்வதே என்பதுதான் அந்த உண்மை. இந்த உலகத்திலிருந்து மகிழ்ச்சியை நாம் பலவந்தமாக எடுத்துக்கொள்ள முடியாது. ஆகவே, கடவுள் நமக்கு அளிக்கும் நன்மைகளையும் கிருபைகளையும் நாம் நம் வெறும் கைகளை ஏந்தி பெற்றுக்கொள்ளவேண்டும்.

**4. மாறாத இறைவனின் செயலில் உள்ள பாதுகாப்பு: (பிரசங்கி 3:14)**

"தேவன் செய்கிறது என்றென்றைக்கும் நிலைக்கும் என்று அறிவேன்; அதினோடு ஒன்றும் கூட்டவும் கூடாது, அதிலிருந்து ஒன்றும் குறைக்கவும் கூடாது; மனுஷர் தம்முடைய சமுகத்தில்

பயந்திருக்கும்படி தேவன் இப்படிச் செய்கிறார்.” (பிர. 3:14). ‘இரட்சிப்பு’ என்பது, தொடக்கம் முதல் முடிவு வரை இறைவனின் செயல் மட்டும் என்பதே SOLA GRATIA கோட்பாட்டின் அடித்தளம். மனிதர்கள் ஒழுக்கத்தில் பலவீனமானவர்கள் என்பதால், மனித முயற்சியைச் சார்ந்திருக்கும் எந்தவொரு இரட்சிப்பின் முயற்சியும் இறுதியில் சரிந்துவிடும்.

அக்டோபர் 31, 1517 அன்று, மார்ட்டின் லூதர் வித்தன்பெர்க் தேவாலய கதவில் தனது 95 கொள்கைகளை ஆணி அடித்தார். மனிதனோ அல்லது திருச்சபையோ இறைவனின் இரட்சிப்புச் செயலில் எதையும் கூட்டவோ குறைக்கவோ முடியாது என்பதே அதன் மையக்கருத்து. கடவுளின் செயலே இறுதியானது, சரியானது, மாற்ற முடியாதது. நம்முடைய நித்திய வாழ்வு நமது பலவீனங்களின் மேல் அல்லாமல், கடவுளுடைய வாக்குத்தத்தத்தில் நிலைத்திருக்கிறது.

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே! கடவுளால் நேசிக்கப்படும் நாம், நமது சொந்த நீதியை நிலைநாட்ட வேண்டிய தேவையில்லை; அல்லது நமது உடைந்த நிலையை நாமாகவே சரிசெய்ய வேண்டியதில்லை. காற்றின் பின்னே ஓடுவதை நிறுத்துவோம். நம் சுயமுயற்சிகளை கைவிட்டு, கர்த்தர் மேல் பாரத்தை வைத்து தூய்மை-வாழ்வு வாழ்வோம். நம் வெறுங்கைகளை உயர்த்தி, கடவுளின் கிருபையை மாத்திரம் நம்பிக்கையுடன் நோக்குவோம். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

அருட்திரு. எஸ்.ஜே.டி. தர்மராஜா, ஆயர் மற்றும் ஊழிய இயக்குநர்,
நற்செய்தி வேதாகம அச்சுப்பதிவு, சாலிகிராமம், சென்னை-600 093. தென்னிந்தியா.

## நற்செய்தி வேதாகம அச்சுப்பதிவு

## Good Tidings Bible-Prints

‘நல்ல விதைகள்’ சுவிசேஷ கைப்பிரதிகள் **GOOD SEEDS’ GOSPEL TRACTS**

சுவிசேஷ ஊழிய பயன்பாட்டுக்காக நற்செய்தி கைப்பிரதிகளை வெளியிட்டு அவற்றை கிறிஸ்துவை அறியாத மக்களுக்கு விநியோகம் செய்துவருகிறோம். மட்டுமல்ல நற்செய்தி பணி செய்வோருக்கு கைபிரதிகளை இலவசமாய் வழங்கி வருகிறோம். ஒரு-வகை கைப்பிரதி (ONE BATCH) வெளியிட ஆகும் செலவு ரூ.3500/- மட்டும். கைப்பிரதிகளை SPONSOR செய்து அனைத்து மக்களும் இயேசுவை அறிந்திட உதவுங்கள். BATCH SPONSORSHIP செய்ய விரும்பும் அன்பர்கள் நமது ஊழிய இயக்குநரை தொடர்புகொள்ளுங்கள். கைப்பிரதிகளை SPONSOR செய்த தேவபிள்ளை களுக்கு எங்கள் நன்றி. எமது கைப்பிரதிகளை இலவசமாகப் பெற்று உங்கள் ஊழியங்களில் பயன்படுத்த அன்புடன் அழைக்கிறோம். ஆமேன்.

அருட்திரு. எஸ்.ஜே.டி. தர்மராஜா, ஊழிய இயக்குநர்
நற்செய்தி வேதாகம அச்சுப்பதிவு, சாலிகிராமம், சென்னை-93. தென்னிந்தியா

வேத ஆராய்ச்சி....

# சங்கீதங்கள் கற்றுத்தரும் விலையேறப்பெற்ற சத்தியங்கள்



சங்கீதம்-113 அக்டோபர் 2026 எப்பிசோடு-113

AUTHOR: Rev. Dr. D. SURESH RAJAN

**சங்கீதம்-113 மைய வசனங்கள்:**

6. கர்த்தர் வானத்திலும் பூமியிலுமுள்ளவைகளைப் பார்க்கும்படி தம்மைத் தாழ்த்துகிறார்.

7. அவர் சிறியவனைப் புழுதியிலிருந்து தூக்கிவிடுகிறார்; எளியவனைக் குப்பையிலிருந்து உயர்த்துகிறார்.

8. அவனைப் பிரபுக்களோடும், தமது ஜனத்தின் அதிபதிகளோடும் உட்காரப்பண்ணுகிறார்.

9. மலடியைச் சந்தோஷமான பிள்ளைத்தாய்ச்சியாக்கி, வீட்டிலே குடியிருக்கப்பண்ணுகிறார். அல்லேலூயா.

**முன்னுரை:**

இந்த சங்கீதம் ஆண்டவருடைய மாட்சியையும், இரக்கத்தையும், தாழ்ந்தவர்களை உயர்த்தும் அவருடைய அருஞ்செயலையும் எடுத்துக்காட்டுகிறது. நாம் வாழும் இவ்வுலகில், மற்ற வர்களின் நலவாழ்வை யாரும் விரும்புவ தில்லை. அடுத்தவரின் துன்பத்தில் இன்பம் காணும் சமூகத்தில் நம்மை தூக்கி விடுவதற்கும் ஆதரிப்பதற்க்கும் ஆண்டவர் நம் பட்சத்தில் இருக்கிறார் என்பதை இங்கு சங்கீதக்காரர் படம் பிடித்து காட்டுகிறார்.

**1. உயர்ந்த ஆண்டவரைப் புகழ்வோம்: (வச.1-5)**

“ஆண்டவரின் ஊழியர்களே, அவரைப் புகழுங்கள். கீழ்த்திசை முதல் மேற்றிசை வரை அவரது பெயர் போற்றப்படவேண்டும் ஏனென்றால் மக்கள் இனங்கள் அனைத்திற்கும் ஆண்டவர் மேலானவர்; அவரது மாட்சி வானங்களையும்விட உயர்ந்தது”

நமது சூழ்நிலைகள் மாறலாம்; ஆனால் ஆண்டவர் மாறுவதில்லை. நமக்கு ஆசீர்வாதம் கிடைத்தாலும், சோதனை வந்தாலும், ஆண்டவர் என்றென்றும் புகழுக்குரியவரே என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

**2. தாழ்ந்தவர்களைப் பார்க்கும் ஆண்டவர்: (வச.6)**

“கர்த்தர் வானத்தையும் வையகத்தையும் குனிந்து பார்க்கின்றார்.”

இது ஆண்டவருடைய இருதயத்தை வெளிப்படுத்துகிறது. அவர் வானத்தில் உயர்ந்தவராக இருந்தாலும், பூமியில் துன்பப்படுகிறவர்களைப் பார்க்கிறார். மனிதர்களால் கவனிக்கப்படாத வர்களை ஆண்டவர் தவறாமல் கவனிக்கிறார். மனிதர்களால் மறக்கப்பட்டவர்களை

ஆண்டவர் நினைவில் வைத்திருக்கிறார். மனிதர்களால் மதிக்கப்படாதவர்களை ஆண்டவர் ஏற்புடன் மதிக்கிறார். ஏழைகளின் கண்ணீரையும், தனிமையில் இருப்பவர்களின் வேதனை யையும், நம்பிக்கை இழந்தவர்களின் உள்ளத்தையும் ஆண்டவர் பார்க்கிறார்.

ஆகவே, நம்முடைய வாழ்க்கையின் எந்நிலையிலும் நாம் ஆண்டவருடைய பாராமரிப்புக் கும் பார்வைக்கும் வெளியே இல்லை என்ற உண்மையை நாம் அறிந்துகொள்ள வேண்டும்.

3. **விழுந்தவர்களை உயர்த்தும் ஆண்டவர்: (வச.7-9)**

“ஏழைகளைத் தூசியிலிருந்து அவர் தூக்கி நிறுத்துகின்றார்: வறியவரைக் குப்பை மேட்டிலிருந்து கைதூக்கி விடுகின்றார்.”

இது இந்தப்பாடலின் மையச் செய்தி. ஆண்டவர் தாழ்ந்தவர்களைப் பார்ப்பது மட்டுமல்ல; அவர்களைத் தூக்கி நிறுத்துகிறார். தூசியில் இருப்பவரை உயர்த்துகிறார். குப்பை மேட்டில் இருப்பவரைக் கைதூக்குகிறார். மக்களால் ஒதுக்கப்பட்டவர்களுக்கு மதிப்பளிக்கிறார்.

மலடியின் வீட்டில் மகிழ்ச்சியை உருவாக்குகிறார். மனிதர்கள் ‘இது முடியாது’ என்று சொல்லும் இடத்தில் ஆண்டவர் புதிய வழியைத் திறக்க முடியும். எனவே வாழ்க்கையில் விழுந்துவிட்டோம் என்று நினைக்கத் தோன்றும் பொழுதும் நாம் நம்பிக்கையை இழக்க வேண்டிய அவசியமில்லை.

அதேபோல், ஆண்டவர் நம்மை உயர்த்தியிருப்பின், நாமும் மற்றவர்களை உயர்த்த வேண்டும். ஏழைகள், துன்பப்படுகிறவர்கள், ஒதுக்கப்பட்டவர்கள், நம்பிக்கையிழந்தவர்கள் போன்றோரை பராமரித்து பாதுகாப்பதோடு, அவர்கள் உயர்வுக்கு நமது பங்களிப்பை செய்யவேண்டும்.

**முடிவுரை:**

இந்தச் சங்கீதத்தின் முழு செய்தியையும் மூன்று வாக்கியங்களில் நாம் நினைவில் வைத்துக்கொள்ளலாம்:

1. ஆண்டவர் உயர்ந்தவர் - அவரைப் புகழ்வோம்.
2. ஆண்டவர் இரக்கமுள்ளவர் - அவரை நம்புவோம்.
3. ஆண்டவர் தாழ்ந்தோரை உயர்த்துகிறார் - நாமும் தாழ்ந்தோரை உயர்த்துவோம்.

ஆண்டவரது பெயர் வாழ்த்தப் பெறுவதாக! இப்பொழுதும் எப்பொழுதும் வாழ்த்தப் பெறுவதாக! அல்லேலூயா! ஆமென்.

சங்கீதங்கள் கற்றுத்தரும்விலையேறப்பெற்ற சத்தியங்கள். தொடரும்......

ஆசிரியர்: அருட்திரு. அறிவர். டி. சுரேஷ் ராஜன், தலைவர் (இந்திய மறை மாநாடு),
குளோபல் மெத்தடிஸ்ட் திருச்சபை.
AUTHOR: REV. DR. D. SURESH RAJAN, CONFERENCE SUPERINTENDENT, INDIA ANNUAL CONFERENCE,
GLOBAL METHODIST CHURCH IN INDIA.

# வேதாகம போட்டி-191 (செப்டம்பர் 2026 போட்டிகள்)

## சரியான பதிலளித்தோர்

1) அமலியா லோகநாதன் (திலை)
2) அமிர்தகனி பொன்ராஜ் (சென்)
3) ஏஞ்சல் C. (திலி)
4) ஏஞ்சல் டார்வின் (கன்)
5) ஏஞ்சல் ராஜதுரை (சென்)
6) ஏஞ்சலின் யோசபாத் ராஜா (சென்)
7) ஏஞ்சலின் ரூஸ்வெல்ட் (சென்)
8) ஏஞ்சலின் வில்லியம்ஸ் (சென்)
9) அனி பாய் ஜாண் (திலி)
10) அரோமா சாத்ராக் (திலி)
11) அருள்செல்வி ஜாண்ஸன் (திலி)
12) பெல்சி தங்கராஜ் (சென்)
13) பெனிட்டா பிராங்க்ளின் Dr. (சென்)
14) பியூலா ஜேசுராஜன் (பாண்)
15) பியூலா ராஜசெல்வன் (கோய)
16) பிரிஸ்கில்லாள் பொன்ராஜ் (தென்)
17) செலினா பென்ஸி வில்சன் Dr. (குவை)
18) செலினா வின்சென்ட் (திலி)
19) சந்திராபாய் மாசிலாமணி (சென்)
20) சந்திரலேகா (ஆபி)
21) சார்ல்ஸ் ஃபின்னி Dr. (சென்)
22) சார்ல்ஸ் சாலமோன் (தெல)
23) சார்லட் டேவிட் (சென்)
24) சித்ரா பெஞ்சமின் (திளு)
25) கிறிஸ்டல் ஜாய் யோபு (திதூ)
26) கிறிஸ்துதாஸ் (ஈரோ)
27) கிறிஸ்டி ஞானராஜ் (சென்)
28) கிறிஸ்டி மெர்சி ராஜ்குமார் (தூத்)
29) கிறிஸ்டி பொன்னுசாமி (மது)
30) சிசிலி புஷ்பம் டேவிட் (சென்)
31) சிந்தி ஜாஷ்வா (தஞ்)
32) டெய்ஸி ஜெபதாஸ் (திசி)
33) டெய்ஸி சாம் (கன்)
34) டேனியல் தாமஸ் (திலி)
35) டேவிட் ஜே.ஆர். (திலி)
36) டேனிங் சொர்ணா ஜெஸ் (சென்)
37) தெபோராள் D. (சென்)
38) தீபா மெர்சி கிறிஸ்டோபர் (சென்)
39) தேவகனி எமிலிசன் (சென்)
40) தேவகிருபை முத்து சகரியா (பாண்;)
41) தேவகிருபை தங்கத்துரை (சென்)
42) தேவநேசம் ராஜாசிங் (சென்)
43) தேவபொன்மலர் ஜோனத்தான் (சென்)
44) டோராபாய் ஜூலியஸ் (சென்)
45) எபெனேசர் கிரேஸ்லின் சாந்தி (திலி)
46) எலிசபெத் அலெக்ஸாண்டர் (சென்)
47) எலிசபெத் செல்லத்துரை (சென்)
48) எமிமாள் சாமுவேல் ஜெஸிக்கா (மது)
49) எஸ்தர் D.R. (திலி)
50) எப்சிபா ஜாண் (ராணி)
51) எவாஞ்சலின் ஜோன்ஸ் Dr. (சேல)
52) கெத்ஸி தம்புராஜ் (பெங்)
53) குளோரி ரவீந்திரன் (திலி)
54) ஞானஜோதி பேரின்பம் (விரு)
55) ஞானம் ஜெபராஜ் (திலி)
56) ஞானம் பிலிப் (திபூ)
57) ஞான ரோஸ் (திளு)
58) ஞானசெல்வி மோசஸ் (அமெ)
59) ஞானசுந்தரி நாகராஜன் (திலி)
60) கிரேஸ் பொன்மணி ரெக்ஸ் (சென்)
61) கிரேஸ் பிரின்ஸ் (தென்)
62) கிரேஸி கிறிஸ்டோபர் (சென்)
63) கிரேஸியா ஜெயபால் (சென்)
64) கிரிசெல்டா செய்லர் (சென்)
65) குணவதி ஜெபமணி (சென்)
66) ஹெலென் ஜான்சிராணி (திலி)
67) ஹெலென் ஜெனிபர் பாண்டியன் (சென்)
68) ஹெலென் திலக் (தூத்)
69) ஹெலென் I. (திளு)
70) ஹேமா அஜீத் (சென்)
71) ஹேமா கேப்ரியேல் (பெங்)
72) ஹெப்சி அசரியா (விழு)

73) ஹிம்லா ராஜகுமாரி (சென்)
74) ஹேமலதா வில்சன் (மது)
75) இளவரசி ஜோபிதா (கோய)
76) இன்பவல்லி கலைச்செல்வன் (மது)
77) இசெபெல்லா எஸ்தர் (கோய)
78) ஜமீலா செல்வராஜ் (சென்)
79) ஜமுனா K. (சென்)
80) ஜேன்ஸ் (ஜான்ஸி) (கோய)
81) ஜேன் தர்மராஜ் (திலி)
82) ஜான்ஸி சந்தியா (திலி)
83) ஜாஸ்மின் ஞானதாஸ் (சென்)
84) ஜாஸ்மின் ஜீவன் டேவிட் (மது)
85) ஜெயக்குமாரி (கோய)
86) ஜெபா ஜெயராஜ் (சென்)
87) ஜெபா ஜோன்ஸ் (கோய)
88) ஜெபக்குட்டி மோசஸ் (திலி)
89) ஜெபமணி சில்வியா (தூத்)
90) ஜெபரஞ்சிதம் மெர்லின் (தூத்)
91) ஜெபா சீனி (திலி)
92) ஜெனிலா S. (சென்)
93) ஜெரின் ஸ்டீபன் (மும்)
94) ஜெஸி செல்லதுரை (கோய)
95) ஜெஸி ஜெயக்குமார் (திலி)
96) ஜெஸிதா அகஸ்டின் (ஆபி)
97) ஜெயா ஆல்பர்ட் (தஞ்)
98) ஜெயா பாக்கியம் (தூத்)
99) ஜெயந்திஹேனா கிறிஸ்டோபர் (அரி)
100) ஜெயசீலி மார்டின் (தூத்)
101) ஜோனா ஸ்டீபன் (சென்)
102) ஜாய்ஸ் பாண்டியன் (சென்)
103) ஜூலியட் அசோக் குமார் (தூத்)
104) ஜூலியட் ஜெபா (திலி)
105) ஜூலியட் ஜெயக்குமார் (திலி)
106) ஜஸ்டினா ஜெபராணி ராஜீவ் (கன்)
107) கலா கிருபாகரன் (திலி)
108) கஸ்தூரி எலியாஸ் (திலி)
109) கிருபாவதி எஸ். (சென்)
110) லதா மைகேல்ராஜ் (சென்)
111) லீலா டேவிட் (சென்)
112) லீலா ஜோஸப் (கோய)
113) லில்லி ஜாண்ஸன் (சென்)
114) லிஸி டென்சிங் (திலி)
115) லோவிசாள் ராஜேந்திரன் (தென்)
116) மல்லிகா ஜெபராஜ் (தூத்)
117) மரியாள் ஜே.எஸ். (தூத்)
118) மேபா ஞான சுகி (கன்)
119) மெஜிலா ஜோஷ்வா (தூத்)
120) மெர்ஸி ஸ்டீபன் (சென்)
121) மெர்லின் தேவராஜ் (சென்)
122) மெர்லின் சாமுவேல் (சென்)
123) மெரிட்டா ஜெயபாலன் (திசி)
124) மில்காள் சாம் (சென்)
125) முத்துமாலினி அலீஸ் (கோய)
126) நேச மாலா பீட்டர் (திலி)
127) நிக்ஸன் எவர்பிரைட் (திலி)
128) ஆலிவ் ஜெயபாலன் (கோய)
129) ஒலிவியா லேங்டன் (திசி)
130) பாக்யபாய் ஆரோன் (திலி)
131) பொன்மணி உத்தமசிங் (சென்)
132) பிரேமா ஸ்டாலின் (சென்)
133) பிரேம்குமாரி ஜெயசிங் (சென்)
134) பிரின்ஸ் தயாநிதி (சென்)
135) பிரிசில்லா சந்திரதாஸ் (சென்)
136) பிரிஸ்கில்லாள் சசி (கோய)
137) புனிதா ரவிநாத் (கோய)
138) ரேச்சல் ஈஸ்டர் (வேலூ)
139) ராஜபிரமீளா (திதூ)
140) ராஜ்மேரி சார்லஸ் (கேர)
141) ரமோலா அதிசயராஜ் (திலி)
142) ராணி பிரபாகர் (திலி)
143) ராணி சாமுவேல்ராஜ் (சென்0
144) ரத்னாவதி பாண்டியன் (சென்)
145) ரியஸ்ஸி ஜாண் சிங் (கோய)
146) ரூபவதி நோபிள் (திலி)
147) ரூத் HAPP (திசி)
148) ரூத் ஜாண்ஸன் (திலி)
149) ரூத் நரேஷ் (திலி)
150) சலோமி மனோகர் Dr. (சென்)
151) சம்பு ஜெயச்சந்திரன் (மது)
152) சாரா பாலசிங் (மது)

153) சரோஜா செல்வராஜ் (சென்)
154) செல்வ பென்சி ஆபேல் (ராணி)
155) செல்வராணி ஆல்பர்ட் (சென்)
156) செல்வி அமிர்தராஜ் (திளு)
157) செல்வி S. (சென்)
158) செல்வின் துரை Pr. (மஹா)
159) செல்வின் S. (தூத்)
160) சாந்தி ஆல்பர்ட் (தென்)
161) சாந்தி ஜெயசீலன் (சென்)
162) சாந்தி ரோஸ் (கோய)
163) ஷர்மீளா செல்வராஜ் Dr. (கட)
164) ஷீபா செல்வின் (சென்)
165) ஷீலா இஸ்ரேல் (திசி)
166) ஷீலா சேகர் (சென்)
167) ஷெரீன் ஜெபராஜ் (திளு)
168) சில்வியா ஃபின்னி Dr. (சென்)
169) சவுந்தரம் சாலமோன் (சென்)
170) ஸ்டெல்லா டேவிட் (தூத்)
171) சுகந்தி ஜெயச்சந்திரன் (கோய)
172) சுகிர்தா சின்னதுரை (திலி)
173) சுஜாதா சாமுவேல் (சென்)
174) சுந்தரிபாய் (தூத்)
175) சுசீலா தியோடோர் (திசி)
176) சுவர்ணலதா அற்புதராஜ் (சென்)
177) தனசீலி ஞானராஜ் (சென்)
178) தெல்மா ஸ்டேன்லி (மது)
179) உமா குளோரி (சென்)
180) உஷா ஜெபராணி SIS. H. (திளு)
181) வனஜா மாரிமுத்து (மது)
182) வசந்தா அன்பன் (திலி)
183) வசந்தா சந்திரசேகர் (கோய)
184) வசந்தா துரைராஜ் (ஔப்டி)(திசி)
185) வசந்தா சேகர் (சென்)
186) வசந்தி கருணாகரன் (சென்)
187) வசந்தி வாசன் (சென்)
188) விஜயராணி A. (சென்)
189) விஜி டேனியல் (செங்)
190) விமலா ஜெயக்குமார் (தூத்)
191) வினோலியா பால் (மது)
192) வினோலியா வில்சன் (திது)
193) வைலட் கிறிஸ்டோபர் (திலி)
194) வைலட் சைரஸ் (திலி)

# வேதாகம போட்டி-191 செப்டம்பர் 2026 போட்டிகள் (நீதிமொழிகள், சரியான விடைகள்)

1. நற்போதகத்தை - இர.பக்.5
2. ஞானம் - இர.பக்.19
3. பேராசைக்காரன் (தி.வி)
   சுயநலக்காரன் (பரி.பை) இர.பக்.:2
4. மதியற்ற ஸ்திரீ - நீதி.9:13
5. சீட்டுப்பே?டுதல் - நீதி.18:18
6. தீர்க்கதரிசனம் - நீதி.29:18
7. தவறு - நீதி.28:27
8. சரி - நீதி.24:20
9. தவறு - நீதி.8:11
10. இ. சுதந்திரம் - நீதி.20:21
11. ஈ. அறிவை - நீதி.12:23
12. ஆ. மடியிலே - நீதி.16:33
13. மூடன் - நீதி.17:16
14. ஐசுவரியமும்
    மகிமையும்
    ஜீவனும் - நீதி.22:4
15. வெள்ளாட்டுப்பால் - நீதி.27:27

# ‘அனைவரும் ஊழியத்தில்’

## ஒவ்வொருவரும் 30-கைப்பிரதிகளை விநியோகிக்கும் திட்டம்

## இத்திட்டத்தின் செயல்முறை பின்வருமாறு

1. **இத்திட்டத்தில் பங்குபெறுவோர்:** இரட்சிப்பு பத்திரிக்கையின் சந்தாதாரர்கள், நற்செய்தி வேதாகம அச்சுப்பதிவு ஊழிய் ஆதரவாளர்கள், வேதாகம போட்டியின் பங்காளர்கள், ஜெப-ஜன்னல் ஜெப பங்காளர்கள் ஆகிய அனைவரும்.

2.**நாங்கள் செய்வது:** மேற்கண்ட நமது ஊழிய ஆதரவாளர்களான உங்கள் அனைவருக்கும் வருடம் ஒருமுறை 30-கைப்பிரதிகளை அனுப்பிவைப்போம். ஒவ்வொரு காலண்டர் மாதத்திலும் தெரிந்தெடுக்கப்பட்ட 30 அன்பர்களுக்கு தபால் மூலம் கைப்பிரதிகள் அனுப்பிவைக்கப்படும்.

3. **நீங்கள் செய்யவேண்டியது:** நீங்கள் வீட்டிலிருந்தவாறே உங்கள் அண்டைவீட்டார், காய்கறி விற்போர், பால் போடுவோர், எலக்ட்ரீஷியன், பிளம்பர், கார்பென்டர், டிரைவர், தூய்மை பணியாளர், வீட்டு-வேலைசெய்வோர், சமையல் எரிவாயு வெண்டர், தபால்க்காரர்கள், மெக்கானிக்குகள் ஆகியோரில் இயேசுவை அறியாதவர்களுக்கு ஜெபத்துடன் கைப்பிரதிகளை வழங்க வேண்டும். இத்திட்டத்திற்கு ஒத்துழைப்பு நல்கி நற்செய்தி பரவிட உதவுங்கள்.

**பின்-குறிப்பு:** இத்திட்டத்தில் பங்குபெற இயலாத நிலையில் இருப்பவர்கள் உங்கள் இயலாமையை வாட்ஸ்அப் மெஸேஜ் வாயிலாக எங்களுக்கு தெரியப்படுத்தலாம். எங்கள் வாட்ஸ்-அப் எண்: 9789914463.

---

அருட்திரு. தர்மராஜா, ஊழிய இயக்குநர், இரட்சிப்பு ஊழியங்கள், சென்னை-93, தென்னிந்தியா

==========================================================================

# ஜெப-ஜன்னல் ஜெப நேரங்கள் அக்டோபர் 2026

**ஜெப-ஜன்னல்-1 காலை-ஜெபம்**
நாள்: 09-10-2026 இரண்டாம் வெள்ளி
நேரம்: காலை 5-முதல் 6-மணி வரை.

**ஜெப-ஜன்னல்-2 மதிய-ஜெபம்**
நாள்: 16-10-2026 மூன்றாம் வெள்ளி
நேரம்: மதியம் 1-முதல் 2-மணி வரை.

**ஜெப-ஜன்னல்-3 இரவு-ஜெபம்**
நாள்: 23-10-2026 நான்காம் வெள்ளி
நேரம்: இரவு 8-முதல் 10-மணி வரை.

பிரியமானவர்களே! இந்த ஜெப-ஜன்னல் ஜெப-நேரங்களில் தானி-6:10 வசனத்தின்படி “தானியேல், மேலறையில் எருசலேம் தேவாலயத்திற்கு நேராய் பலகணிகள் திறந்திருக்க” ஜெபித்ததைப் போல் நமது இயக்குநரும், ஜெப-ஜன்னல் ஜெப-வீரர்களும் ஆலயம் நோக்கி ஜெபிக்கவிருக் கிறார்கள். நீங்களும் உங்கள் ஆலயம் நோக்கி தனியாகவோ, குடும்பமாகவோ, குழுவாகவோ ஜெபிக்க அன்புடன் வேண்டுகிறோம். நீங்கள் வீட்டில் இருந்தவாறே காலை, மாலை அல்லது இரவு - எந்த ஜெபத்தில் பங்குபெற விரும்புகிறீர்கள் என்பதையும் உங்கள் பெயர், ஊர், மொபைல் எண் விபரங்களையும் 9789914463 என்ற எங்கள் எண்ணுக்கு வாட்ஸ்-அப் மூலம் தெரியப்படுத்தவும்..

==========================================================================

# வேதாகம போட்டி-192 (அக்டோபர் 2026 போட்டிகள்)

**பிரசங்கி புத்தகம் முழுவதும்**

## 1-3 கேள்விகள் இரட்சிப்பு பத்திரிக்கையிலிருந்தும் (பக்கம் 2,19,20)

## 4-12 கேள்விகள் வேதாகமத்திலிருந்தும் கேட்கப்படுகின்றன

வேதவசன இருப்பிடம் மற்றும் இரட்சிப்பு பத்தரிக்கை பக்கம் எண் அவசியம் எழுதவேண்டும்.

**பதில்கள் அனுப்ப கடைசிநாள்: 25-10-2026**

1. இரகசியமாகப் பேசப்படும் வார்த்தைகளைக்கூட காற்றில் பறந்துசென்று அரசனிடம் போட்டுக்கொடுக்கும் ஒற்றன் யார்?

2. பிரசங்கி 12ம் அதிகாரம், எதை, ஒரு கவிதைபோல் விவரிக்கிறது?

3. 'தேவனுடைய அநுக்கிரகம்' என்ற வார்த்தையை, சத்தியவேதம் மற்றும் பரிசுத்தபைபிள் ஆகியவை இணைத்திருமறையில் எவ்வாறு குறிப்பிடுகின்றன?

4. பானையின்கீழ் எரிகிற முள்ளுகளின் படபடப்பைப் போல் இருப்பது எது?

5. யாருடைய வாய்மொழிகள் தயையுள்ளவைகள்?

6. மாயை மாயை எல்லாம் மாயை என்று சொல்லுகிறது யார்?

7. 'அதிக ஞானத்திலே அதிக சலிப்புண்டு' - சரியா தவறா?

8. 'நகைப்பைப் பார்க்கிலும் துக்கிப்பு நலம்' - சரியா தவறா?

9. 'யுத்த ஆயுதங்களைப் பார்க்கிலும் ஞானமே பலம்' - சரியா தவறா?

10. வெளிச்சம் இன்பமும், 'இதை' காண்பது கண்களுக்கு பிரியமுமாம்:
அ) சூரியனை ஆ) சந்திரனை இ) விடிவெள்ளியை ஈ) விண்மீனை

11. எல்லாம் ஒரே இடத்துக்கு போகிறது; எல்லாம்; 'இதிலே' உண்டாகிறது:
அ) மண்ணிலே ஆ) சுவாசத்திலே இ) கருவிலே ஈ) வேரிலே

12. 'இவன்' தன் கைகளைக் கட்டிக்கொண்டு, தன் சதையையே தின்கிறான்:
அ) அரக்கன் ஆ) பேதை இ) துன்மார்க்கன் ஈ) மூடன்

13. முகத்தின் மினுமினுப்பை ஏற்றும்!
முகத்தின் மூர்க்கத்தை மாற்றும்! இது என்ன? இது என்ன?

14. ஊருக்கு வழிகேட்கும் தொல்லை இவன்!
உளறிடும் வாய்பிறப்பில் மதியீனன்!
ஓவராக பேசிநிற்கும் அறிவீனன்! இவன் யார்? இவன் யார்?

15. வளைத்திடும் வளை-கோல்கள் இவை!
பிணைத்திடும் பிணை-ஆணிகள் இவை!
மேய்த்திடும் நல்லாயன் தந்தவை இவை!
இவை எவை? இவை எவை?

---

பதில் அனுப்பவேண்டிய முகவரி: திருமதி.ஜெயசீலி தர்மராஜா, எஃப்-1, முதல் மாடி, பாரதி பிளாட்ஸ், எண்: 4/2-A பாரதி தெரு, காந்தி நகர், சாலிகிராமம், சென்னை-93. வாட்ஸ்-அப்: 9789914463

பதில்கள் அனுப்ப கடைசிநாள்: 25-10-2026

==========



# கர்த்தருடைய நாமங்களின் மகத்துவங்கள்

தொகுப்பாசிரியர்: சகோ. சி. ஏஞ்சல்

பாகம்-89 அக்டோபர் 2026 எப்பிசோடு-89

# தயையுள்ளவர்

THE GRACIOUS GOD

Eleimon Theos

' எலிமோன் தியோஸ்'

கர்த்தர் தயையுள்ளவரென்பதை நீங்கள் ருசித்ததுண்டானால், திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருங்கள். 1பேது.2:1,3

Desire the sincere milk of the word, if so, be you have tasted that the Lord is gracious. 1Pet.2:2,3

கிருபை, இரக்கம், நீடியசாந்தம், மகாதயை, சத்தியம் நிறைந்த தேவநாமத்தில் இரட்சிப்பின் விசுவாசிகளுக்கு அக்டோபர் மாத, கிருபையின் வாழ்த்துக்கள்.

**தயை என்கிற செங்கோலை நீட்டுகிறார்.**

**சங்.**102:13 கர்த்தர் நமக்கு நன்மைசெய்வார் என்ற விசுவாசத்துடன் காத்து இருக்கிறவர்களுக்கு தமது சிங்காசனத்திலிருந்து எழுந்தருளி தம்முடைய இரக்கத்தினால் தயை செய்கிற காலத்தையும் நேரத்தையும் கொண்டுவருகிறார்.

**யாத்.**33:19 பேர்சொல்லி அழைத்து அறிந்திருக்கிற பிள்ளைகளுக்கு தமது மகிமையைக் காட்டி, தமது தயையை எல்லாம் உங்களுக்கு முன்பாகக் கடந்துபோகப்பண்ணுகிறார்.

**எஸ்.**2:9-17 தன்னைக் காண்கிற எல்லாருடைய கண்களுக்கும் தயை கிடைக்கும்படி கர்த்தர் செய்கிறார்; அவர் வைத்துள்ள ஆசீர்வாதமான ராஜகிரீடத்தைச் சூட்டுகிறார்.

**1சாமு.**1:18 உபவாசத்துடன் காத்திருந்து, காத்திருந்து, சோர்ந்துபோன பிள்ளைகளுக்கு கர்த்தருடைய கண்களில் தயை கிடைத்ததால், அவர்களை போஜனம் பண்ணச்செய்து, அவர்களுடைய துக்க முகத்தை மாற்றுகிறார்.

**ஏசா.**55:7 தவறை உணர்ந்து கர்த்தரிடத்தில் திரும்பும்போது, மன்னிக்கிறதற்கு தயை பெருத்தவராய் இருக்கிறார்.

**ஜெபம்:** ஆயிரம் தலைமுறை மட்டும் உடன்படிக்கையையம் தயையையும் காக்கிற உண்மை யுள்ள தேவனே! உம்மைத் துதிக்கிறோம். எங்களை ஆசீர்வாதத்தின் வாசலுக்கு அழைத்துச் செல்வீராக. இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஜெபிக்கிறோம் உண்மையுள்ள பிதாவே. அல்லேலூயா, ஆமென்.

---

**தொகுப்பாசிரியர்: சகோ. சி. ஏஞ்சல் B.SC திருநெல்வேலி, தென்னிந்தியா**

===========================================================================



**தேன்-துளி வேத வசனக் கதைகள்**

(கதை-185 அக்டோபர் 2026)

ஆசிரியர்: சகோ. எம். அசரியா ஞானதாஸ் எம்.ஏ; எம்.எட்

# பாவிகளைச் சந்தித்த பாதி-வேதம்

ROY-ROSELET தம்பதியர், குடும்பமாக பின்லாந்தில் வாழ்ந்துவந்தனர். அவர்கள், தேவனை அறியாமல், தெய்வபயமற்றவர்களாய் வாழ்ந்து வந்ததால் தங்கள் பிள்ளைகள் இருவரையும் தெய்வ பக்தியில் வளர்க்கவில்லை. இருவரும் புத்தகம் படிக்கும் பழக்கம் உள்ளவர்கள்; தொழிற்சாலையில் பணிபுரிந்து வந்தனர்.

ஒருநாள் ஒரு புத்தக வியாபாரி அவர்கள் வீட்டிற்கு வந்து, பல புத்தகங்களோடு ஒரு புதிய ஏற்பாட்டையம் காட்டி அவற்றை வாங்கிக்கொள்ளச் சொன்னான். எனவே ROSELET அந்த புத்தகங்களோடு, புதிய ஏற்பாட்டையும் வாங்கிக் கொண்டாள். அன்றிரவு ROY வீடு திரும்பியதும் அவனிடம் புத்தகங்களைக் காட்டினாள். ROY தெய்வபயம் இல்லாத முரடனாய் இருந்தபடியால், அவன் அந்த புதிய ஏற்பாட்டை இரண்டாக கிழித்து ஒருபகுதியை தான் வைத்துக்;கொண்டு மறுபகுதியை ROSELET-டிடம் கொடுத்தான்.

நாட்கள் கடந்தன, ROY 3மாத பணிக்காக அவனுடைய கம்பெனியின் கிளைக்கு அனுப்பப்பட்டான். அங்கு, தனியாக இருக்க நேர்ந்ததால், தன்னிடம் இருந்த பாதி-புதிய ஏற்பாடு புத்தகத்தை படிக்க ஆரம்பித்தான். லூக்கா 15ம் அதிகாரத்தின் பின் பகுதியில், கெட்ட குமாரன் தன் தகப்பனிடம் திரும்பி வந்த சம்பவம் அவன் கண்ணில் பட்டு அதை வாசிக்கலானான். இளைய மகனை தகப்பன் ஏற்றுக்கொண்ட சம்பவத்தை அவன் வாசித்தவுடன் அந்த அதிகாரத்தின் முன்பகுதியை வாசிக்க ஆவல் அதிகரித்தது. எனவே, வீடு திரும்பும் நாளுக்காக ஆவலுடன் காத்திருந்தான். 3மாதங்கள் முடிந்து வீடு திரும்பியதும் முதல் வேலையாக லூக்கா 15ம் அதிகாரத்தை முழுவதுமாக படித்தான். ஒரு சாதாரண தகப்பனின் அன்பு ஆஸ்தியை அழித்துப்போட்ட மகனை மன்னிக்கக்கூடுமாயின் இயேசு கிறிஸ்துவின் தேவ அன்பு, முரட்டாட்டமும் தெய்வபயமின்மையும் நிறைந்த தன்னையும் தன் குடும்பத்தையும் நிச்சயம் ஏற்றுக்கொள்ளும் என விசுவாசித்து, தன் பாவங்களை அறிக்கையிட்டு, இயேசுவை ஏற்றுக்கொண்டு திருச்சபையில் குடும்பமாய் இணைந்தான். ROY-ROSELET குடும்பத்தினரின் மனந்திரும்பிய ஜெபவாழ்க்கையின் பயனாக தேவன் அவர்களை அபரிமிதமாக ஆசீர்வதித்தார். மகனை இஞ்சினியர் ஆகவும் மகளை டாக்டர் ஆகவும் கர்த்தர் உயர்த்தினார்.

பிரியமானவர்களே! நாமும் வேதம் வாசிப்பு, ஜெபத்தியானம் என, தூய வாழ்வு வாழும்போது கர்த்தர் நம்மையும் நம் குடும்பத்தையும் அளவில்லாமல் ஆசீவதிப்பார். வேதம் இவ்வாறு கூறுகிறது:

கர்த்தருடைய வேதம் குறைவற்றதும் ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது. சங்-19:7

கர்த்தருடைய வேதத்தில் இரவும் பகலும் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான். சங்-1:2

கட்டளையே விளக்கு, வேதமே வெளிச்சம். நீதி-2:8

---

M.AZARIAH GNANADOSS M.A, M.ED

EDITOR, RATCHIPPU TAMIL CHRISTIAN MONTHLY, SALIGRAMAM, CHENNAI-93. MOBILE:9962924900

## இரண்டாயிரம் ஆண்டு வரலாறு
## 2ம் வருகைக்குத் தயாராகு
# இந்திய கிறிஸ்தவ திருச்சபை சரிதை

(1முதல் 21ம் நூற்றாண்டுவரை)

தொகுதி-10 பகுதி-04 எப்பிசோடு-51 அக்டோபர் 2026

கட்டுரை ஆசிரியர்: முனைவர். திருமதி. சலோமி மனோகர்



**10. மீண்டும் தாமஸ் கிறிஸ்தவர்கள்**

**4. ஒரு நூற்றாண்டின் இறுதியில்**

17ம் நூற்றாண்டு, இந்தியாவின் தாமஸ் கிறிஸ்தவர்களுக்கு குறிப்பிடத்தக்க பலவித கஷ்;டங்களையும் எழுச்சிகளையும் கொண்ட காலமாக இருந்தது. போர்த்துகீசியர்கள் அவர்களை ரோமத் திருச்சபையின்கீழ் கொண்டுவர முயற்சித்ததன் விளைவாக சுயாட்சி இழப்பு, கலாச்சார சீர்குலைவு மற்றும் நிரந்தர சமூக-பிளவு போன்ற பிரச்சனைகளை தாமஸ் கிறிஸ்தவர்கள் சந்திக்க நேர்ந்தது.

இந்திய கிறிஸ்தவ வரலாற்றில் கி.பி.1498 முதல் 1863வரை போர்த்துகீசியரின் காலகட்டமாக கருதப்படுகிறது. தாமஸ் கிறிஸ்தவர்களின் போர்த்துகீசிய தொடர்பு கிபி.1498ல் தொடங்கி, சுமார் 160 ஆண்டுகள் உச்சத்தில் இருந்தது. கிழக்கு திருச்சபையுடன் தனித் தொடர்பை பராமரித்து வந்த தாமஸ் கிறிஸ்தவர்கள் மீது கட்டுப்பாட்டை நிலைநாட்ட போர்த்துகீசியர் முயன்றனர்.

1.போர்த்துகீசியர், கிறிஸ்தவ நம்பிக்கையைத் தீவிரமாகப் பரப்பினர். சுவிசேஷப் பயிற்சி பெற்றவர்கள் மூலமாக நேரடியாக சுவிசேஷப் பணியில் ஈடுபட்டனர்.

2.போர்த்துகீசியரின் டயம்பர்-பேரவை (கி.பி.1599) தாமஸ் கிறிஸ்தவர்களை ரோம திருச்சபைக்கு உட்படுத்தி, ரோம வழிபாட்டு முறைகளை அவர்கள்மீது திணித்தது.

3.போர்த்துகீசியர்;, தாமஸ் கிறிஸ்தவர்கள் உள்ளூர் இந்து ஆட்சியாளர்களுடன் வைத்திருந்த உறவுகளை குறைமதிப்பிற்கு உட்படுத்தினர்.

4.தாமஸ் கிறிஸ்தவர்களின் போர்த்துகீசிய எதிர்ப்பு, கூனன் கிராஸ் (கி.பி.1653) உறுதிமொழிக்குப் பின்னர் உச்சத்தை அடைந்தது, அங்கு அவர்கள் ஐரோப்பிய மதகுருக்களின் அதிகாரத்தை நிராகரிப்பதாக சபதம் செய்தனர். இது, தாமஸ் கிறிஸ்தவர்களின் ஒற்றுமையை உடைத்து, பிரிவினைக்கு வழிவகுத்தது.

5.போர்த்துகீசிய எதிர்ப்பு, தாமஸ் கிறிஸ்தவ சமூகத்திற்குள் நிரந்தரப் பிளவுக்கு வழிவகுத்தது, சிலர் ரோமுக்கு விசுவாசமாக இருந்தனர், சிலர் புதிய பிரிவுகளை உருவாக்கினர், சிலர் கிழக்கு சிரிய திருச்சபைக்கு விசுவாசமாய் இருந்தனர்.

6.போர்த்துகீசியர்கள் பண்டைய தேவாலயங்களை அழித்து, கிழக்கு திருச்சபைத் தொடர்பில் மெசபடோமியாவிலிருந்து வந்த மதகுருமார்களை இடைமறித்து சிறையில் அடைத்து பாரம்பரிய நடைமுறைகளை நசுக்கினர்.

7.தாமஸ் கிறிஸ்தவர்கள் தங்கள் சுயாட்சியை இழந்து, போர்த்துகீசியர் திணித்த சடங்குகள் மற்றும் கோட்பாடுகளுக்கேற்ப மாற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

8.வேலை வாய்ப்புகளில் கிறிஸ்தவர்களுக்கு போர்த்துகீசியர் முன்னுரிமை அளித்தனர். அரசுப்பணிகளில் கிறிஸ்தவர்கள் மட்டுமே சேரமுடியும் என உத்தரவு இடப்பட்டதால், பலர் வேலைக்காக கிறிஸ்தவ மதத்தைப் பின்பற்றினர்.

9.போர்த்துக்கீசியர், பல வழிபாட்டுத் தலங்களைக் கட்டினார்கள். துறவிகளும் இந்தப் பணியில் பங்கெடுத்துக் கொண்டனர்.

10.போர்த்துக்கீசியர், அரசியல் அதிகாரத்தைப் பயன்படுத்தி பிற மதத்தினரை கிறிஸ்தவ மதத்திற்கு மாற்ற முயன்றனர். வெள்ளை நிறமுடைய அழகிய இந்திய பெண்களை திருமணம் செய்துகொள்ள வீரர்கள் ஊக்குவிக்கப்பட்டனர்.

11.தொடக்கப்பள்ளிகளை நிறுவி குழந்தைகள் பலரை பள்ளியில் சேர்க்க நிதி உதவியையும் போர்த்துக்கீசியர் வழங்கினர்.

12.கி.பி.1506ல், வைஸ்ராய் பிரான்சிஸ் டி அல்மீடியா, கொச்சியில் ஒரு மருத்துவ மனையை (ஹோலிகிராஸ் மருத்துவமனை) தொடங்கினார். மருத்துவமனையில் நோயாளிகளுக்கு பிரார்த்தனை செய்ய மதகுருமார் தொடர் வருகை செய்தனர்.

திருச்சபையானது, கத்தோலிக்க நம்பிக்கை மற்றும் நல்நெறிமுறைகளை அறிவுறுத்துவதில் சிறந்து விளங்கினாலும், முறையாக பயிற்சி பெறாத, நல்லொழுக்கமற்ற, விவேகமற்ற பல்வேறு மதக் கொள்கைகளைக் கொண்ட பலர் அதில் பணியாற்றினர். இத்தகைய பிரச்சனைகள் இருந்த போதிலும், குர்பான், நற்கருணை, ஞாயிறு வழிபாட்டின் கூட்டுறவு, தாழ்மையான காணிக்கை களைச் செலுத்த வலியுறுத்துதல் போன்ற பிரதி ஞாயிறு ஆராதனைத் தொடர்ச்சியைப் பராமரிக்க, திருச்சபை தொடர்ந்து ஒற்றுமையின் வலுவான உணர்வைப் பேணியது.

சாராம்சத்தில், போர்த்துகீசியரின் அதிகாரத்தைத் தக்கவைக்கவும், அவர்களுக்காக வேலை செய்யவும் பல நாட்டினர் முயன்றனர். இவ்விதங்களில், தாமஸ் கிறிஸ்தவர்கள் கலாச்சார அடையாள இழப்பு மற்றும் சமூகப் பிளவு போன்ற பல்வேறு துன்பங்களை அனுபவித்த நிலையிலும், மீண்டுமாக வெவ்வேறு குழுக்களை சமரசம் செய்து ஒற்றுமையை மீட்டெடுக்க தாமஸ் கிறிஸ்தவ சமூகத்திற்குள் தொடர்ந்து முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பெரும்பாலான தாமஸ் கிறிஸ்தவர்கள் இந்தியாவின் கேரளாவில் வசிக்கும் அதே வேளையில், மேற்கத்திய நாடுகளுக்குப் புலம்பெயர்ந்தோர் எண்ணிக்கையும் அதிகமாக உள்ளது.

இந்திய கிறிஸ்தவ திருச்சபை வரலாறு தொடரும்......

---

AUTHOR: DR. MRS. SALOMI MANOHAR M.A., M.PHIL, P.HD ASSISTANT PROFESSOR (RTD),

(POPE'S COLLEGE, SAWYERPURAM) THIRUVANMIYUR, CHENNAI-41, SOUTH INDIA

==========================================================================

# DETAILS ABOUT US

**OUR CONTACT DETAILS:**

MOBILE: 9962924900/7871676100

WHATSAPP: 9789914463/7871676100

E-MAIL: sjddharmaraja@gmail.com

OUR WEBSITE: www.ratchippu.com

POSTAL ADDRESS: REV. S.J.D. DHARMARAJA,

MISSION DIRECTOR, NO: 4/2-A, BARATHI ST.,

GANDHI NAGAR, SALIGRAMAM, CHENNAI - 93

ADDL. E-MAIL: ratchippuratchippu@gmail.com

**OUR BANK DETAILS:**

NAME: DHARMARAJA SJD.

S.B. ACCOUNT NO: 601071548.

BANK & BRANCH: INDIAN BANK, NESAPAKKAM

IFSC CODE: IDIB000N122.

BANK ADDRESS: NESAPAKKAM, CHENNAI-78.

**OUR UPI DETAILS:**

UPI NAME: GOOGL-PAY (G-PAY)

UPI ID: sjddharmaraja@okhdfcbank

NAME: REV. DHARMARAJA SJD

G-PAY NUMBER: 9789914463

**OUR QR CODE**

Rev. Dharmaraja S.J.D

UPI ID: sjddharmaraja@okhdfcbank

Scan to pay with any UPI app

---

Good Tidings Bible Prints

CHRISTIAN LITERATURE PUBLICATIONS

# நற்செய்தி வேதாகம அச்சுப்பதிவு

## GOOD TIDINGS BIBLE PRINTS

**GOOD SEEDS TRACTS - நல்ல விதைகள் கைப்பிரதிகள்)**

சுவிசேஷ ஊழிய பயன்பாட்டுக்காக 22 வகையான நற்செய்தி கைப்பிரதிகளை வெளியிட்டு அவற்றை, கிறிஸ்துவை அறியாத மக்களுக்கு விநியோகம் செய்து வருகிறோம். ஒரு-வகை கைப்பிரதியின் ஒரு தொகுதியை (BATCH SPONSORSHIP) வெளியிட ஆகும் செலவு ரூ.3500/- மட்டும். கைப்பிரதிகளை SPONSOR செய்து அனைத்து மக்களும் இயேசுவை அறிந்திட உதவுங்கள். விரும்பும் அன்பர்கள் நமது ஊழிய இயக்குநரை தொடர்பு கொள்ளுங்கள்.

அருட்திரு. எஸ்.ஜே.டி. தர்மராஜா, ஊழிய இயக்குநர்
நற்செய்தி வேதாகம அச்சுப்பதிவு, சென்னை-93. தென்னிந்தியா.

---



# வசன தியானம்

ஆசிரியர்: Rev. S.J.D. தர்மராஜா,
ஊழிய இயக்குநர், இரட்சிப்பு ஊழியங்கள்,

தியானம்-174 அக்டோபர் 2026

## உடைந்த ஜாடியை சீர்செய்தல்

### வாழ்வின் இறுதி கட்டங்கள் பற்றிய அழகிய கவிதை

தீங்குநாட்கள் வராததற்கு முன்னும், எனக்கு பிரியமானவைகளல்ல என்று சொல்லும் வருஷங்கள் சேராததற்கு முன்னும் வாலிபப்பிராயத்திலே உன் சிருஷ்டிகரை நினை. பிரசங்கி-12:1

**பிரசங்கி 12ம் அதிகாரம் `மனித முதுமையை ஒரு கவிதைபோல விவிரிக்கிறது**. முதுமையின் அடையாளங்களை, உடைந்த ஜாடியை ஒட்ட வைப்பதுபோல் பிரசங்கி விவரிக்கிறார். வீட்டுக் காவலாளிகள் தள்ளாடுவது (கை-நடுக்கம்), ஜன்னல்கள் வழியாய் பார்க்கிறவர்கள் அந்தகாரப் படுவது (மங்கிய பார்வை), அரைக்கிறவர்கள் ஓய்வது (பல் போவது), எந்திர சத்தம் தாழ்வது (காது-கேளாமை) போன்ற முதுமையின் விளைவுகளை அவர் விவரிக்கிறார் (பிர.12:6).

வாழ்க்கை எவ்வளவு பலவீனமானது மற்றும் தற்காலிகமானது என்பதை இது நினைவூட்டு வதோடு, சங்.39:4ன் "கர்த்தாவே, நான் எவ்வளவாய் நிலையற்றவன் என்று உணரும்படி, என் நாட்களின் அளவு இவ்வளவு என்பதையும் எனக்குத் தெரிவியும்." என்ற வார்த்தைகளை எதிரொலிக்கிறது. நமது விசுவாசம் மற்றும் தெய்வீக உறவில் கவனம் செலுத்த நமக்கு இன்னும் நிறைய நேரம் இருக்கிறது என்ற மாயையிலேயே நாம் வாழ்கிறோம். வாழ்க்கை சற்று நிதானமடையும் போது, 'பிறகு' தேவனைத் தேடலாம் என்று நமக்கு நாமே வாக்குறுதி அளித்துக் கொள்கிறோம். ஆனால், நம்மிடம் பெலன் இருக்கும்போதே, சிருஷ்டிகரை நினைப்பதே மிகச் சிறந்த தருணம் என்று சாலமோன் வாதிடுகிறார்.

ஒரு நாளில் நம் கைகளை விட்டு நழுவிப்போகும் தற்காலிகமான உலகக் காரியங்களைத் தேடி நம் வாலிப நாட்களை வீணடித்தால், வாழ்வின் இறுதியில் வெறுமையைத் தவிர நம் கைகளில் வேறு எதுவும் மிஞ்சாது. பிரசங்கி-12: "தேவனுக்குப் பயந்து, அவர் கற்பனைகளைக் கைக்கொள்; எல்லா மனுஷர் மேலும் விழுந்த கடமை இதுவே" (பிர.12:13) என முடிகிறது. நம் வாலிபம், ஆரோக்கியம், மற்றும் சாதனைகள் அனைத்தும் அழிந்துபோகும்போது, நித்திய தேவனுடன் நாம் கொண்டுள்ள உறவு மட்டுமே உடையாமல் நிலைத்திருக்கும். ஜாடி முற்றிலும் உடைந்துபோகும் வரை காத்திருக்காமல் இப்போதே அதை சீர்செய்வோம். 1யோவா.2:17 சொல்வதுபோல்: "உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம்; தேவசித்தப்படி செய்கிறவன் நிலைத்திருப்பான்." உங்களை இன்றே தேவனுக்குக் கொடுங்கள், ஏனென்றால் அவரே உங்கள் நித்தியத்தை கையில் வைத்திருக்கிறார். இன்று நீங்கள் எந்த தற்காலிகமான தீர்வைத் தேடி ஓடிக் கொண்டிருக்கிறீர்கள்? அந்த முயற்சியை உங்கள் சிருஷ்டிகரை நினைவுகூரும் வகையிலே மாற்றி அமையுங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பார். ஆமென்.

அருட்திரு. தர்மராஜா, ஊழிய இயக்குநர், இரட்சிப்பு ஊழியங்கள், சென்னை-93, தென்னிந்தியா

# செய்தித்துளிகள் அக்டோபர் 2026

1. ஒலியைவிட 5மடங்கு வேகமான ஹைப்பர்சோனிக் ஏவுகணையை வெற்றிகரமாக சோதனை செய்தது வடகொரியா.
2. ‘எல்நினோ’ பருவநிலை மாற்றம் காரணமாக, இந்தியாவில் 16,000 பேர் உயிரிழக்க நேரிடும் என ஆய்வில் தகவல்.
3. தமிழ்நாட்டிலுள்ள பள்ளிகளில் காலை உணவை முதலில் ஆசிரியர்கள் சாப்பிட்டு தரம் சரிபார்க்க அரசு உத்தரவு.
4. ரூ.2,000க்கு மேலான வணிக யுபிஐ பரிவர்த்தனைகளுக்கு அக்.15முதல் 0.4% கட்டணம்; உண்டு என NPCI அறிவிப்பு.
5. ஐபிஎல்-2027க்கான வீரர்கள் ஏலம் வரும் டிசம்பர் மாதம் கோவாவில் நடைபெறும் என் பிசிசிஐ செயலாளர் அறிவிப்பு.

---

## சீர்திருத்த தினம் 2026
## நல்வாழ்த்துக்கள்

இரட்சிப்பு பத்திரிக்கை வாசகர்கள், ஆதரவாளர்கள், படைப்பாளர்கள், அலுவலக வலைதள கைபிரதி ஊழியர்கள் அனைவருக்கும், அனைத்து திருச்சபை அன்பர்களுக்கும் எங்கள் உள்ளம் கனிந்த சீர்திருத்த திருநாள் நல்வாழ்த்துக்கள்.

இரட்சிப்பு

**OCT, 31**
**REFORMATION DAY**
**2026**



---

AI செயற்கை நுண்ணறிவு வினா-விடை விவிலியம்

எப்பிசோடு-02
புத்தகம்-21
பிரசங்கி புத்தகம்

## அக்டோபர் 2026

**எப்பிசோடு-02 பிரசங்கி புத்தகம் புத்தகம்-21**

வினா-1 சூரியனுக்குக் கீழே எல்லா பிரயாசத்தின் பின்னணியிலும் ஒளிந்திருக்கும் பெருநிழல் எது?
விடை: அது மாயை. அது காற்றுக்குப் பின்னால் ஓடியும், எதையும் கையில் பிடிக்கமுடியாத வீண் பிரயாசம்!
வினா-2 வாசனைத் தைலத்தைக் கெடுத்து, நாற்றமடிக்க வைக்கும் அந்தச் சிறிய குற்றவாளி யார்?
விடை: செத்து விழுந்த சிறிய ஈ! அது ஞானியின் நற்பெயரையும் சிறிய மூடத்தனத்தால் கெடுத்துவிடும்!
வினா-3 இரகசியமாகப் பேசப்படும் வார்த்தைகளைக்கூட காற்றில் பறந்துசென்று அரசனிடம் போட்டுக் கொடுக்கும் ஒற்றன் யார்?
விடை: ஆகாயத்துப் பறவை. அது தன் இறக்கைகளால் இரகசியச் செய்தியைக் கொண்டுபோய்ச் அரசனிடம் சேர்த்துவிடும்!...